## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மாவட்ட நீதிபதி

**2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 05–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசித் திங்கள் 19 ஆம் நாள்**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.71/2020–ல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 01/2025**

**01. வையாபுரி**
**02. ஜெயவேல்**
**03. செல்வராஜ்**
**04. M.C.முருகேசன்**
**05. சேகர்**
**06. ஜீவா** **...மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்.**

**–எதிர்–**

**01. ஆறுமுக பண்டாரம்**
**02. இராஜேஸ்வரி**
**03. நீலமாணி**
**04. இந்திராணி**
**05. இரத்தினம்**
**06. பாலாமணி**
**07. A. பாலசந்திரன்** **...எதிர்மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள்.**

இந்த மனு இன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.B.திவான்மொகைதீன்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.C.சக்திவேல்** அவர்களும் தோன்றியும் இரு தரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையில் இருந்துவந்த இந்த மனுவில் இந் நீதிமன்றம் இன்று ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

மேல்முறையீடு வழக்கில் மனுதாரர்கள்/01-ஆம், 02-ஆம், 09-ஆம், 11-ஆம், 20-ஆம், 24-ஆம் எதிர்மனுதாரர்களை தோன்றாத் தரப்பினராக்கி 20.07.2021-ஆம் தேதியன்று நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்துச்

செய்து மேல்முறையீட்டை எதிர்த்து நடத்த மனுதாரர்களுக்கு வாய்ப்பு வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 41-ஆம் வகுமுறையின் 21-ஆம் விதியின்கீழ் இம் மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர்கள் மேல்முறையீட்டு வழக்கில் 01-ஆம், 02-ஆம், 09 ஆம், 11-ஆம், 20-ஆம், 24-ஆம் எதிர்மனுதாரர்கள் ஆவர். முதலேற்பு வழக்கு எண்.130/2004 ஆனது 05.04.2019-ஆம் நாள் தள்ளுபடி செய்யப் பட்டது. அதை எதிர்த்து எதிர்மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் இந்த மனுவை தாக்கல்செய்தனர். மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் 20.07.2021 ஆம் தேதியன்று வழக்குரைஞர் மூலம் தோன்றாததால் தோன்றாத் தரப்பினர் ஆக்கப்பட்டனர். மனுதாரர்கள் வழக்குரைஞர் மூலம் தோன்றாதது வேண்டு மென்றோ அலட்சியத்தாலோ ஏற்பட்டது அல்ல. ஆகையால், 20.07.2021 ஆம் தேதியன்று மனுதாரர்களை தோன்றாத் தரப்பினராக்கி நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்து ஆணையிட வேண்டும்.

**எதிருரையின் சுருக்கம்**

02. 20.09.2021-ஆம் நாள் மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டனர் என்ற சங்கதி உண்மை. 20.07.2021-ஆம் தேதியன்று ஏன் மனுதாரர்கள் நேரடியாகவோ வழக்குரைஞர் மூலமாகவோ தோன்றவில்லை என்பதற்கு மனுவில் எந்த காரணமும் சொல்லப்படவில்லை. தோன்றாத் தரப்பினரான மனுதாரர்கள் 4 ஆண்டுகள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுவில் நல்லெண்ணம் இல்லை. முகாந்திரம் இல்லை. ஆகையால், இந்த மனுவை தள்ளுபடிச்செய்ய வேண்டும்.

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**03. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

## தீர்முடிவு

**04.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டும் அவர்கள் தோன்றாததால் 20.07.2021-ஆம் நாள் தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டனர். 20.07.2021-ஆம் நாள் ஏன் நேரடியாகவோ வழக்குரைஞர் மூலமாகவோ தோன்றவில்லை என்பதற்கு மனுவில் எந்தவித காரணமும் சொல்லப்படவில்லை. அந்த ஆணையை இரத்துச் செய்ய வேண்டும் என்று மட்டுமே 4 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் சொல்லப்பட்டுள்ளது. 20.07.2021-ஆம் தேதியன்று ஏன் தோன்றவில்லை என்பதற்கும் 4 ஆண்டுகள்வரை மனுதாரர்கள் என்ன செய்தார்கள் என்பதற்கும் மனுவில் எந்தவொரு காரணமும் சொல்லப்படவில்லை.

**05.** மேல்முறையீட்டில் எதிர்மனுதாரர்களை தோன்றாத் தரப்பினராக ஆக்கி ஆணை பிறப்பித்தால் அதை இரத்துச் செய்வதற்கு விண்ணப்பம் தாக்கல்செய்ய வகையமுள்ளது என்பதால் மட்டுமே எந்தவித காரணமும் சொல்லாமல் மனு தாக்கல்செய்தால் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

**06.** இருப்பினும் வழக்குகள் அனைத்தும் தகுதிப்பாட்டின்மீது முடிவு செய்யப்பட வேண்டும் என்ற நன்கு நிறுவப்பட்ட சட்டவிதியை கவனத்தில் வைத்தும் பல்முனை வழக்கு நடவடிக்கைகளை தவிர்க்கவும் நீதியின் நலன்

கருதியும் இந்த மனுவை அனுமதித்து மனுதாரர்களுக்கு மேல்முறை - யீட்டை எதிர்த்து நடத்த ஒரு வாய்ப்பு வழங்குவது உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

07. இருப்பினும் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு 5,000/- உரூபாயை செலவுத்தொகையாக கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பது பொருத்தமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

08. இறுதியாக, மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு 13.11.2025 ஆம் தேதியன்றுக்குள் 5000/- **(ஐந்தாயிரம் மட்டும்)** உரூபாயை செலவுத்தொகையாக கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப் படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு நவம்பர்திங்கள் 05–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

**(ஒப்பம்) வே.புகழேந்தி**
**மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

**உண்மை/வரைவு ஆணையுரை**

**மேல்முறையீட்டுவழக்கு எண் 71/2020–இல்**

**வழக்கிடை விண்ணப்ப எண்.01/2025**

நாள் 05.11.2025